IJCRT.ORG ISSN : 2320-2882
INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)
An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# பண்டைத்தமிழரும் கோட்பாட்டும்

**முனைவர் வீ.பாரதிராஜா**

உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
இலயோலா கல்லூரி,
சென்னை-34

## அறிமுகம்

தமிழில் தோன்றிய இலக்கியங்களுக்கெல்லாம் தாய் இலக்கியமாகத் திகழ்வது சங்க இலக்கியமே. கி.மு.பதினோறாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த பெருவெடிப்பால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் சங்கம் வைத்து தமிழ்வளர்த்த குமரிக்கண்டம் அழிந்தது. அக்காலத்தில் இருந்த சில இலக்கிய ஏடுகளும் நாடுகளும் அழிந்தன. ஓலைச்சுவடியில் எழுதிப் பாதுகாத்து வந்த தமிழர்களின் இலக்கியக் கருவூலங்கள் கரையான்களாலும், சமயப்பூசல்களாலும், வேற்று நாட்டுப் படையெடுப்புகளாலும் அழிந்ததுபோக, இன்று நம்கையில் கிடைக்கிற பண்டைத்தமிழ் இலக்கியங்கள் அதன் தொன்மையிலும் சரி, நிகழ்காலத்தன்மையிலும் சரி, அதேநேரத்தில் வியக்கத்தக்க தெளிவாலும், அவற்றின் விழுமியத்தாலும், எடுத்துக்கொண்ட கருத்தியல் நிலைப்பாட்டாலும் அவை செவ்வியல் இலக்கியமாகத் திகழ்கின்றன. பிற்காலத்தில் தோன்றிய இலக்கியங்களுக்கெல்லாம் வழிகாட்டும்தகுதி கொண்ட முன்னோடி இலக்கியமாகவும் அமைந்திருக்கின்றது.

பழந்தமிழ் இலக்கியங்கள் அன்றைய கால நிகழ்வுகளின் நாட்குறிப்பு அல்ல. சமகால வாழ்க்கையின் நிகழ்வுகளின் பிரதிபலிப்பும், அதற்கு முந்தைய பல்லாண்டுத் தொன்மங்களின் நினைவு கூறலும், வாய்மொழிமரபை ஆவணப்படுத்துதலையும் செய்திருக்கின்றன. அவ்வகையில் பழந்தமிழரின் வாழ்வியல் நீள அகலங்களைப் புலன்விசாரித்த முதல் தொன்மை இலக்கியம் சங்க இலக்கியம். இவ்விலக்கியம் பண்டைத் தமிழ்மக்களுக்கு எண்ணற்ற நற்சிந்தனைகளைக் கூறியுள்ளது. அவற்றுள் காணப்படும் தத்துவக் கோட்பாடுகள் சிலவற்றை இக்கட்டுரை ஆராய்கிறது.

## திறவுச் சொற்கள்

கோட்பாடு, பழந்தமிழர், தத்துவம், உயிர், நிலையாமை சங்ககாலம்,வாழ்வியல், உலகத்தோற்றம், குமரிக்கண்டம்

## தத்துவம் அறிமுகம்

தத்துவம் என்பது வடமொழிச் சொல். ஆங்கிலத்தில் Philosophy 'பிளாசோபி', தமிழில் உண்மை; உள்ளதை உள்ளவாறே அறிவதைப் பற்றிய கொள்கை, மெய்யியல் அல்லது மெய்க்கோட்பாட்டு, கருத்து, நடைமுறை விளக்கம், அனுபவ உண்மைகள், வழிநடத்திச் செல்வது, துணைநிற்பது என்று பொருள்.

தத்துவம் என்பது புரியாத புரிந்து கொள்ளமுடியாத புதிரன்று அல்லது விளங்காத விளங்கமுடியாத ஒன்றன்று. கடவுள் பற்றிய உண்மைகளைப் பேசுவதும், எழுதுவதுமே 'தத்துவமென்று காலப்போக்கில் பொருள் கற்பிக்கப்பட்டு புனிதமான ஒன்றாக்கப்பட்டுவிட்டது. ஆனால், எந்தவொரு தத்துவமும் வாழ்வைப் பற்றி, வாழ்க்கையில் காணப்படும் சிக்கல்களைக் குறித்து, சிக்கல்களுக்குரிய காரணங்களை விளக்கி, அவற்றை போக்குவதற்கான நல்லதொரு வழிமுறையை எடுத்துரைத்துப் பேசக்கூடியதாகவே இருக்க வேண்டும். அதுமட்டுமின்றி வாழ்வினூடாகச் சென்று பகுத்துப் பார்த்து உண்மையைப் பேசுவதாகவும் இருக்க வேண்டும். மறுமலர்ச்சியால் சமூகத்தில்

நிகழும் மேன்மையை எடுத்துச் சொல்லும் ஒரு திசைகாட்டியாக தத்துவம் திகழ்வது மானுட முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் என்பது உறுதி.

### சங்ககால வாழ்வியலும் தத்துவமும்

சங்ககால வாழ்க்கை முறை பண்டைத் தமிழரின் மரபுவழியை எடுத்துக்காட்டுகிறது. எனவேதான் அவர்களின் இயற்கையோடு இயைந்த வாழ்வியல் முறையைப் பலரும் போற்றுகின்றனர். அவற்றை பழந்தமிழ் இலக்கியங்களிலும் பதிவுசெய்துள்ளனர். இலக்கியங்களில் உலக வாழ்வைப் பொய் என்றோ? மாயம் என்றோ? நிலையற்றது என்றோ வலியுறுத்தவில்லை. மாறாக மக்கள் இவ்வுலகில் எப்படி வாழவேண்டுமோ அதற்குரிய நெறிமுறைகளை விளக்கியும், இல்லறத்தில் பின்பற்ற வேண்டிய ஒழுக்கங்கள், சமுதாய வாழ்க்கையில் கடைபிடிக்கக் கூடிய கடமைகள், அரசியல் வாழ்க்கையில் அணிசேர்க்கும் நேர்மைமையான கடமைகளெல்லாம் எவ்வாறு நடைபெறல் வேண்டும் என்றும்; ஆட்சி அதிகாரத்தில் அரசனுக்கு இருக்க வேண்டிய பொறுப்புணர்வுகள், அமைச்சர்களின் நிருவாகத் திறமைகள், போரியல் முறைகள் முதலிய கொள்கைகளையே பரவலாக வலியுறுத்துகின்றன. இவ்வாறு அமைந்த பண்டைத்தமிழ் இலக்கியங்கள் தத்துவக்கோட்பாட்டுக் கருத்துகளையும் எடுத்துரைக்கத் தவறியதில்லை.

### உலகியல் தோற்றக் கோட்பாட்டுத் தத்துவம்

இவ்வுலகமும் உலகப்பொருட்களும் ஐம்பெரும்பூதங்களால் உருவானவை என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். நிலம், தீ, நீர், காற்று, ஆகாயம் ஆகியவற்றின் சேர்க்கையால் தோன்றியதுதான் உலகம் என்கிறது இன்றைய அறிவியல் உண்மை. இவ்வுண்மையைப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது. இவரைத் தொடர்ந்து ஐம்பெரும்பூதங்களான நிலனையும், வானையும், காற்றையும், நெருப்பையும், நீரையும் உலகம் கொண்டுள்ளது என்று உலகத்தின் தோற்றம் குறித்து சங்கப் புலவரான முரஞ்சியூர் முடிநாகராயர் பாடலைப் பாடியுள்ளார்.

**மண்திணிந்து நிலனும் / நிலன் ஏந்திய விசும்பும் / விசும்புதைவரு வளியும் / வளித் தலைஇய தீயும் / தீ முரணிய நீரும் என்றாங்கு / ஐம்பெரும் பூதத்து இயற்கை போல / போற்றார்ப் பொறுத்தலும் சூழ்ச்சியது அகலமும் / வலியும் தெறலும் அளியும் உடையோய் /** (**புறம்**. 2) எனும் பாடலில் மண்செறிந்த நிலமும், நிலத்திலிருந்து ஆகாயமும், ஆகாயத்திலிருந்து காற்றும், காற்றிலிருந்து நெருப்பும், நெருப்பிலிருந்து நீரும் தோன்றின என்ற ஐம்பெரும் பூதங்களின் தோற்றக் கோட்பாட்டு முறையைக் குறித்து பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சங்கப்புலவர் பாடியுள்ளார். இவ்வாறாக அவர் பாடலில் வெளிப்படும் உலகத்தோற்றத்தின் தத்துவப் பார்வையானது இன்றைய அறிவியல் சிந்தனையோடு பொருந்திச் செல்வதை அறியமுடிகிறது

**உயிர்க் கோட்பாட்டுத் தத்துவம்**

'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்' (தி.ம:724) என்கிறது திருமூலச் சித்தர் அருளிய திருமந்திரம். உடலுக்கும் உயிருக்கும் மிகமிக நெருங்கிய தொடர்புண்டு. இந்தப்பூதவுடல் எதை ஏற்கிறதோ அதை உயிரும் ஏற்கும். அதாவது அழியத்தொடங்கினால் அதனோடு சேர்ந்து உயிரும் அழிவைப்பெறும். ஊனுடம்பு ஆலயம் (தி.ம:1823) என்பதால் உடலைப் போற்றிப் பாதுகாத்தால் உயிரையும் போற்றிப் பாதுகாக்கலாம் என்று அறிந்த திருமூலர் 'உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே' (தி.ம:724) என்று கூறியுள்ளார். இதைப்போன்றே உடல் உயிரின் முக்கியத்துவத்தைச் சங்கப் புலவரான கணியன் பூங்குன்றனார் உணர்த்தியுள்ளார். .... **மின்னொடு / வானம் தண்துளி தலைஇ ஆனாது / கல்பொருது இரங்கும் மல்லல்போர் யாற்று / நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆர்உயிர் / முறைவழிப் படூஉம் என்பது திறவோர் / காட்சியில் தெளிந்தனம்** (**புறம்**. 192) எனும் இப்பாடலில் மேகமானது மின்னலுடன் குளிர்ந்த மழையைப் பொழிவதால், அளவில்லாமல் கல்லின்மீது மோதுவதால் ஏற்படும் ஒலியுடன் பாய்ந்து ஓடக்கூடிய பெரிய ஆற்றுநீரின் மேல் மிதந்து செல்லும் படகுபோல, அரிய உயிரும் முறைவழியேதான் செல்லும்

என்பதை அறிஞர்கள் இயற்றிய நூல்கள் வழியே தெளிவாக அறிகிறோம் என உடம்பில் வந்தடைந்த உயிர். உடம்பு செய்யும் வினைக்கேற்ப இன்பத்தையும் துன்பத்தையும் அனுபவித்துக்கொண்டே இருக்கும் என்று கூறுவதன்மூலம் உடலைவிட்டு உயிர் மட்டும் தனித்து இயங்காது. அது உடலைச் சார்ந்தேதான் இருக்கும் என்ற உயிர்க் கோட்பாட்டுத் தத்துவத்தை எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

## நிலையாமைக் கோட்பாட்டுத் தத்துவம்

இம்மண்ணுலகில் எதுவும் நிரந்தரமானவை என்று ஒன்றில்லை. எல்லாமும் மாறுதலுக்குட்பட்டது என்பர் ஆன்றோர். நிலைத்து நில்லாத பொருள்களை எல்லாம் நிலையானவை என்று மயங்கிக் கிடப்போர்க்குச் சங்ககாலப் புலவர் முதல் சித்தர்கள் வரை அநேகர் நிலையாமைத் தத்துவத்தை வலியுறுத்திப் பாடியுள்ளனர். அவர்களுள் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் என்னும் புலவர் நல்ல குறுந்தொகையில் நிலையாமைக் கோட்பாட்டுத் தத்துவத்தை **நில்லாமையே நிலையிற்று, ஆகலின் / நல்இசை வேட்ட நயனுடைய நெஞ்சின் / கடப்பாட்டாளன் உடைப் பொருள் போலத் / தகுதற்கு உரியது அன்று**. (**குறுந்** 143) எனும் குறிஞ்சித் திணை பற்றிய இவ்வடிகளைக் கொண்ட பாடலோ அகப்பொருள் பற்றிய பாடலாகும். தலைவன் பொருள் தேடும் நிமித்தம் தலைவியைப் பிரிந்து சென்றதனால்; தலைவி அப்பிரிவை ஆற்றாது பசலையுற்று வருந்தினாள். அதனைக் கண்ட தோழி, 'ஆயிழையே! அவன், நமது இளமைப் பருவமும் யாக்கையும் நிலைத்தவையல்ல; நம்முடைய செல்வமும், வாழ்வும் சிதையாமல் உலகில் என்றும் நிலையாக நிற்பது புகழ் ஒன்றுதான் என்னும் உண்மையை நன்கு உணர்ந்தவன் நம்தலைவன். ஆகவே, இவ்வுண்மையை உணர்ந்தவர் எவராயினும், செல்வத்தை நல்வழியில்தான் செலவழிப்பார்: இத்தகைய குணம் உடையவரின் செல்வமே நிலைத்திருப்பதில்லை. அவரை விட்டுப் பிரிந்துதான் செல்லும் அதுபோல் உன் உடம்பில் தோன்றிய பசலையும் நீங்கிவிடும். வருந்த வேண்டாம்' என்று தோழி கூற்றாக நிலையாமைக் கோட்பாட்டுத் தத்துவத்தை விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

**பண்புநலக் கோட்பாட்டுத் தத்துவம்**

பண்புடையவர்கள் வாழ்வதால்தான் மக்கள் வாழ்க்கை எப்போதும் நிலைத்து இருக்கிறது. அவர்கள் மட்டும் வாழாது போவார் என்றால் மனித வாழ்க்கை மண்ணுக்குள் புகுந்து மடிந்து போகும் என்பார் திருவள்ளுவர். பண்பானது மனிதனது குணத்தினை மட்டுமன்றி அறிவையும் ஒருங்கே வெளிப்படுத்துகிறது. அதனால்தான் சமுதாய வாழ்வில் பயின்றுவரும் அனைத்துச் செயல்களிலும் மனிதனது பண்பை முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது. இதனைப் பொதுவாக 'வாழ்க்கைப் பண்பு' என்று கூறப்படுகிறது. இவ்வாழ்க்கைப் பண்பினை **ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்குதவுதல் / போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை / பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல் / அன்பெனப் படுவது தன்கிளை செருஅமை / அறிவெனப் படுவது பேதையார் சொல் நோன்றல் / செறிவெனப் படுவது கூறியது மருஅமை / நிறையெனப் படுவது மறிபிறர் அறியாமை / முறையெனப் படுவது கண்ணோடாது உயிர்வௌவல் / பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல். (கலித்தொகை-133)** என நல்லந்துவனார் என்னும் சங்கப் புலவர் ஒன்பது வகையாகப் பகுத்து. அவற்றின் நெறி முறையினையும் மொழிந்துள்ளார். எவ்விடத்தில் எவ்விதமாய் நடந்து கொள்ளவேண்டும் என்ற கொள்கையைப் பின்பற்றி, பண்டைக் காலத்து தமிழ்மக்கள் பண்பாடுமிக்கதோர் வாழ்வியலை வாழ்ந்துள்ளனர் என்பதைச் சங்கப் பாடல்கள் நமக்குத் தெளிவுபடுத்துகின்றன.

**அரசியல் கோட்பாட்டுத் தத்துவம்**

மக்களாய்ப் பிறந்தவர்கள் தங்களுடைய சிந்தனையைச் செம்மையான வழியிலேயே செலுத்தி, நன்மை தீமைகளை ஆராய்ந்து, அவற்றிலிருந்து நன்மையானவற்றையே நாடி, நலம்தரும் வாழ்க்கையை அமைத்துக்கொள்வதில்தான் தனக்கும், மற்றவர்களுக்கும் பெருநன்மையும், பேரின்பமும் ஏற்படுகின்றன என்ற கருத்து அறிஞர் பெருமக்கள் காலங்காலமாகச் கூறிச்சென்றுள்ள உண்மையாகும். அவ்விதச் செம்மையான

முயற்சிகளில் ஒன்றுதான் அரசியல். இவ்வரசியலால்தான் மக்களின் நல்வாழ்விற்காகவும், நன்மைக்காகவுமான ஒரு நல்ல அரசை நிறுவ முடியும். அரசின் தலையாயக் கடமையாகக் கருதுவது மக்களுக்கு நல்ல சூழ்நிலைகளை அமைத்துக் கொடுப்பதும், அவற்றிற்கு இடையூறாக நிற்கும் சக்திகளை அழிப்பதுமே என்பதை விளக்கும் விதமாக **அறநெறி முதற்றே அரசின் கொற்றம்**; / **அதனால் நமர்எனக் கோல்கோ டாது**; / **பிறர்எனக் குணம் கொல்லாது**; / **ஞாயிற்று அன்ன வெம்திறல் ஆண்மையும்**; / **திங்கள் அன்ன தண்பெரு சாயலும்**; / **வானத் தன்ன உண்மையும் மூன்றும்**; / **உடையை யாகி இல்லோர் கையற**; / **நீ நீடு வாழிய**! (**புறம்**.55) என மதுரைமருதன் இளநாகனார் என்னும் புலவர் பாடியுள்ளார். இவ்வடியில் இலவந்திகைப் பள்ளி துஞ்சிய பாண்டிய நன்மாறனை நோக்கி குற்றம் செய்வோரிடத்து சூரியனைப் போன்றும்; நன்மை செய்வோரிடத்து திங்களைப் போன்றும் இருந்து வறுமையில்லா ஆட்சி செய்கிறவன் எனப் புலவர் புகழ்ந்துரைக்கிறார். ஒரு அரசனின் ஆட்சி சிறப்பென்பது எவ்வாறு இருக்க வேண்டுமென்பதைத் திருவள்ளுவர் குடிமக்களுக்கு நோயின்மை, செல்வம், பொருள்வளம், இன்பவாழ்வு, நல்ல காவல் ஆகிய இவ்வைந்துடன் கூடிய உயரிய சூழ்நிலைகள் நன்முறையில் அமைந்தால் அது மக்களின் பெருவாழ்வு மட்டுமன்று நாட்டின் பேரழகுமாகும் என்று எடுத்தியம்பியுள்ளார். நீதிப்படி ஆட்சி செய்யாமல் அதிலிருந்து வழுவினால், மக்களை நேர்மையாக வழிநடத்தாமல் இருந்தால் அரசின் அழிவுக்கு வழி பிறக்கும் என்பதை சிலப்பதிகாரமும் ‘அரசியல் பிழைத்தோர்க்கு அறமே கூற்றாகும்’ என்ற அரசியல் தத்துவம் மேற்சுட்டிய பாடல்வழி தெளிவாக்கப்பட்டுள்ளது.

## தவநெறிக் கோட்பாட்டுத் தத்துவம்

இவ்வுலகில் போரின்றி அனைவரும் சமத்துவத்துடனும் சகோதரத்துடனும் மன அமைதியுடன் வாழ வேண்டுமென்று நினைக்கின்றவர்கள் சிலரேயாவர். அவர்களுள் சிலர் தமது ஆசபாசங்களைத் துறந்து, மானுட மேன்மையைக் கருத்தில் கொண்டு தம் வாழ்வை சமுதாய நலனுக்காவே ஒப்படைத்தனர். அவர்களைத்

துறவிகள், அடிகள், சித்தர்கள், தவசிகள், முனிவர்கள், ஞானிகள் என்று அழைக்கப்படுவர். அவர்கள் நல்லொழுக்கமிக்கவர்களாகவும், தன்நலமற்றவர்களாகவும், பொதுநலம் பேணுபவர்களாகவும், உலக உயிர்களின் நலத்தில் அக்கறை கொண்டவர்களாகவும் இருப்பர். அவர்கள் தவத்தினால் பெற்ற உயர்ந்த கொள்கைகளை மக்களிடையே எடுத்துக்கூறி வாழ்வியலுக்கு முரண்பட்டவற்றை சீர்செய்யும் சீர்திருத்தவாதிகளாக விளங்கினர். ஆகவே, தவநெறி பூண்டவர்களை மக்கள் மரியாதை செய்து, தம் உள்ளத்தில் உயர்ந்த இடத்தைக் கொடுத்துப் போற்றியது பழந்தமிழர்களின் பண்பட்ட பழக்கவழக்கத்தையே காட்டுகிறது. சித்தர்களின் மீது மக்களுக்கு இருந்த மதிப்பையும் இதன்வழியாக அறியமுடிகிறது.

மக்களின் நன்மதிப்பைப் பெற்ற தவத்தில் சிறந்த சான்றோர்களுக்கென்று தனித்துவமான ஆடைகள், அணிகள் தோன்றலாயின. பண்டைக் காலத்து, மக்களின் உள்ளத்தை உணர்வதற்கு, தவநெறியினரின் தூய்மையான பண்பைக் காட்டுவதற்கு வெளிக்கோலத்தையும் ஒரு கருவியாகக் கொண்டிருந்தனர் என்பதை **சீரை தைஇய உடுக்கையர் / சீரொடு வலம்புரி புரையும் வால்நரை முடியினர் / மாசற விளங்கும் உருவினர்; மானின் / உரிவை தைஇய ஊன்கெடு மார்பின்/ என்பு எழுந்து இயங்கும் யாக்கையர் நன்பகல் / பலவுடன் கழிந்த உண்டியர் இகலொடு / செற்றம் நீக்கிய மனத்தினர் யாவதும் / கற்றோர் அறியா அறிவினர் கற்றோர்க்குத் / தாம்வரம்பு ஆகிய தலைமையர் காமமொடு / கடும்சினம் கடிந்த காட்சியர், இடும்பை / யாவதும் அறியா இயல்பினர், மேவரத் / துனியில் காட்சி முனிவர்**.( திருமுருகாற்றுப்படை130-136). என சங்க காலத்துத் தவநெறிச் சான்றோரின் நிலையைப் புலவர் நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் தெளிவாக உணர்த்தியுள்ளார். அதாவது, அன்றைய காலத்து முனிவர்கள் மரவுரியை ஆடையாக உடுத்தியிருப்பர், நரைத்த முடியை வலம்புரிச் சங்குபோல் உயர்ந்து நிற்குமாறு முடிந்திருப்பர்; முக்காலமும் குளித்து முழுகியதால் தூய உடம்புடன் காட்சியளிப்பர்; மான் தோலை அணிந்திருப்பர்; பல நாட்கள் விரதம் என்னும் பெயரால்

உணவின்றி வாழ்வதால், மார்பின் எலும்பை எண்ணிக் கணக்கிடும் அளவிற்கு உடல் மிக மெலிந்திருப்பர்; உள்ளத்தில் பகையும், சினமும் இல்லாமல் முகமலர்ச்சியுடன் இருப்பர்: எல்லாவற்றையும் கற்றவர்களாகவும், எவரும் அறியாத பல உண்மையை உணர்ந்தவர்களாவும் இருப்பர்; கற்றவர்களுக்கெல்லாம் ஓர் எல்லையாக நிற்பர்; காமத்தையும் கொடிய சினத்தையும் துறந்திருப்பர்; சிறந்த ஞானம் கொண்டிருப்பர்; எவ்வுயிர்க்கும் எத்துணையும் தீமை செய்யாத இயல்போடிருப்பர்; மேலும் மேலும் வளர்கின்ற மாசற்ற அறிவினோடிருப்பர் என்று உணர்த்துகின்றன. இவ்வடிகள் பண்டைய முனிவர்களின் தோற்றத்தையும் இயல்பையும் சிறப்பையும் தெளிவாக உணர்த்துவனவாயினும் தவநெறியில் காணப்படும் தத்துவ உண்மை நிலை இன்னதுதான் என்பதையும் எடுத்துக்காட்டுகிறது.

**முடிவுரை**

இயற்கை வாழ்வியலை அமைத்துக் கொண்ட சமுதாய மக்களின் அன்றாடத் தேவைகள் என்ன என்பதை மக்களே அறியும்படிச் செய்வதான் படைப்பின் பயனாகும். தொல்தமிழர்கள் பண்டைத் தமிழ்இலக்கியத்தில் அகம் புறமென்று ஒரு தெளிவான இலக்கியக் கோட்பாட்டை ஏற்படுத்தி ஏற்றம் கண்டனர். சங்கத் தமிழன் மிகத்தெளிவாக எதையும் ஒரு திட்டமிட்டு வாழ்ந்துள்ளான் என்பதற்கான அடையாளம்தான் செவ்விலக்கியங்கள். பழந்தமிழ் இலக்கியத்தில் வாழ்க்கை நெறி குறித்துப் பாடுகிற சங்கப் புலவர்களின் கூர்த்த மதிநுட்பமும் திட்டமிட்ட தெளிவான கோட்பாடுகளும் வியப்பை அளிக்கும் உண்மைகளாகத் திகழ்கின்றன. சங்கப் புலவர்கள் பாடல்கள் வழியே வானியல் கோட்பாடு, மருத்துவக் கோட்பாடு, களவியல் கோட்பாடு, கற்பியல் கோட்பாடு, ஓர் இறைக்கோட்பாடு என தாம் வலியுறுத்தும் கருத்துகள் எதுவாயினும் அஃது உலகம் முழுமைக்கும் பொதுவான வகையிலேயே அமைத்து சமூகத்தின் மேம்பாட்டிற்கு வித்திட்டுள்ளதை அறியமுடிகிறது. அவ்வகையில் சங்க காலச் சமுதாயத்தில் சாதிப்பற்றோ மதப்பற்றோ இனப்பற்றோ காணப்படவில்லை.

ஆனால், எவ்வூரும் தன்னூராகவும், எந்நாட்டினரும் தம் உறவினராகவும் எண்ணுகிற தமிழர்களின் உலகளாவியக் கோட்பாட்டுக் குணம் இன்று நினைத்துப் பார்க்க பார்க்க வியப்பையும் பெருமிதத்தையும் கொடுக்கிறது. அவர்கள் மனிதர்களிடம் மட்டும் உறவினராகக் கருதாமல் புல், பூண்டு, செடி, கொடி,மரம், பறவை விலங்கு என எல்லாவற்றிடத்தும் பேரன்பைக் காட்டிய அவர்களின் உயிர் நேயப் பற்று ஒன்று மட்டுமே மேலோங்கிக் காணப்படுகிறது. தொல்தமிழரின் வாழ்வியலை எடுத்துச் சொல்லும் சங்க இலக்கியப் பாடல்களில் பொதிந்து கிடக்கும் சில தத்துவக் கோட்பாடுகளை எடுத்து விளக்கப்பட்டன. இவை போன்று இன்னும் பல பாடல்களும் உள்ளன. இருபத்தோறாம் நூற்றாண்டு காலத்தில் அறிவியல் உலகத்தோடு போட்டி போடும் அளவிற்குத் தத்துவக் கருத்துகள் பொதிந்த இலக்கியங்களை இயற்றிய சங்கப் புலவர்கள் அனைவரும் 'தத்துவ மேதைகள்' எனப் போற்றும் வகையில் பாடல்களைப் படைத்தளித்துள்ளனர்.

## ஆய்விற்குதவிய நூல்கள்


1. குறுந்தொகை,கழக வெளியீடு, சென்னை-1,1955
2. கலித்தொகை, கழக வெளியீடு ,சென்னை-1,1973
3. புறநானூறு, கழக வெளியீடு,சென்னை-1,1947
4. திருமூலர், திருமந்திரம், கழக வெளியீடு,சென்னை,1963
5. கி.வ.ஜகநாதன், திருமுருகாற்றுப்படை, விளக்கம், அமுத நிலையம்,சென்னை,1978